[பேரவைத் தலைவர்] [1994 ஏப்ரல் 20

இல்லை என்பதையும், இந்த வழக்கிலே குற்றம் சாட்டப்பட்டுள்ள முக்கியமானவர்களை, காவல் துறையினர் ஏற்கனவே கைது செய்து,, தகுந்த மேல் நடவடிக்கையெடுத்து வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதோடு முடிகிறது. (குறுக்கீடு) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு: திரு. டி. வேலையா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. வேலையா. (குறுக்கீடு) இல்லை. பரிதி நான் சொல்லிவிட்டேன். இந்தப் பிரச்சினைகளில் எப்போதும் பதிலுரைக்குப் பிறகு கேட்க அனுமதிப்பது இல்லை. நீங்கள் ஒவ்வொரு முறையும் இதுமாதிரி பிரச்சினையை எடுத்துக் கொள்கிறபோது, பதில், உரைக்குப் பின்னர், விளக்கம் கேட்க முற்படுவது தவறு. (குறுக்கீடு)

முற்பகல் *11.50*

திரு. இளம்வழுதி: நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்)

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப் பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை - பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: திரு. திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவராகிய உங்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் ஒரு வேண்டுகோள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். பிரதான எதிர் கட்சித் தலைவர் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து, பணியாற்றும் விதத்திலே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்குக் கொடுத்த தண்டனையை ரத்து செய்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அறையிலேயே சொன்னீர்கள். நான் உங்களுக்கு அங்கேயே சொன்னேன். நேற்றையதினம் இதே பிரச்சினையை திரு. அப்பு நடேசன் அவர்கள்

இங்கே எழுப்பியபோது, நான் பதில் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவரோ, அவரைச் சார்ந்த மற்ற உறுப்பினர்களோ, இங்கே வந்து பணியாற்றுவதில் எந்தவிதமான தடையும் இல்லை. இப்போது கூட அவர்கள் வரலாம். எனவே, அதிலே எந்தத் தடையும் இல்லை. இங்கே வந்து அவர்கள் என்ன பிரச்சினை இருக்கிறதோ, அந்த பிரச்சினையைக் கிளப்பலாம். அதற்காக அவர்கள் உண்ணாவிரதம் இருக்கவேண்டியதெல்லாம் அவசியம் இல்லை என்று நேற்றே நான் சொல்லியிருக்கிறேன். அதை உங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.(குறுக்கீடு). இல்லை. நான் நேற்றே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) அவர் முறை தவறி நடந்து கொண்ட காரணத்தால், அந்தத் தண்டனைக்கு உரியவர்தான். அந்தத் தண்டனை இருந்தால்தான், மற்ற உறுப்பினர்களும் இதைப்போன்ற தவறு செய்வதைத் தவிர்ப்பார்கள். ஒன்றுக்கு இரண்டு முறை, முறைகேடாக நடந்து கொண்டால், இப்படிப் பேரவைத் தொடக்கக் கூட்டம் முழுவதும், நாம் கூட்ட நிகழ்ச்சிகளிலே இருந்து தள்ளிவைக்கப் படுவோம் என்கிற எச்சரிக்கை மற்ற உறுப்பினர்களுக்கும் இருக்க வேண்டும் என்பதற்காக அந்தத் தண்டனை இருக்க வேண்டும் (குறுக்கீடு) திரு. டி. வேலையா.

4. கவன ஈர்ப்பு

(அ) திருநெல்வேலி தொகுதி ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் 46 பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை வரையிலும், ஹைகிரவுண்ட் முதல் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்று வந்த தடம் எண் 46, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகப் பேருந்து டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்டதை மீண்டும் (குறுக்கீடு) இயக்குவது குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் (குறுக்கீடு) கொண்டு வருகிறேன்.

3. எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் தள்ளிவைக்கப் பட்டிருப்பதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை– பேரவை தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருநாவுக்கரசு நீங்கள் கேட்டீர்கள். நான் அதற்குச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு). இன்னொரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறார்.(குறுக்கீடு) இதிலே வேண்டாம். திருநாவுக்கரசு இதிலே வேண்டாம். (குறுக்கீடு) நான் சொல்லிவிட்டேன்.(குறுக்கீடு)

திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் வெளிநடப்புச் செய்கிறேன்.

(திரு. திருநாவுக்கரசு வெளிநடப்புச் செய்தார்)

4. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

(அ) திருநெல்வேலி தொகுதியில் ஹைகிரவுண்ட் முதல் வல்லபன் கோட்டை மற்றும் நாராயண அம்மாள்புரம் வரையிலும் சென்றுவந்த தடம் எண் 46 பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

அறிக்கை

(அ) தடம் எண் 46 நகர பேருந்து வாயிலாக நாரயண அம்மாள் புரத்திற்கு தினசரி 6 சுற்றுக்கள் திருநெல்வேலி ஹைகிரவுண்ட்-நாரயண அம்மாள்புரம் என இயக்கப்பட்டு வந்தது. இந்தச் சுற்றுகள் அனைத்திலுமே பயணிகள் விகிதாச்சாரம் போதிய அளவு இல்லாமல் இருந்ததால் வருமானம் இத்தடத்தில் மிகவும் குறைந்து காணப்பட்டதாலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் இப்பேருந்து 1991-ஆம் வருடம் நிறுத்தப்பட்டது.

இருப்பினும் மாற்று ஏற்பாடாக தடம் எண் 29 ஏ நகரப் பேருந்து வாயிலாக நாரணம்மாள்புரத்திற்கு திருநெல்வேலி ஜங்ஷன்-நாரணம்மாள்புரம் எனக் கூடுதலாக 4 சுற்றுகள் இயக்கப்பட்டு